அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களைக் கூப்பிட்டால், வந்து சிகிச்சை அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

55—

தொழிற்பேட்டை

***37293—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியத்தில் புதிதாக தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், ஏறத்தாழ 49 கிராமப் பஞ்சாயத்துகளும், ஒரு பேரூராட்சியும் அடங்கிய ஒன்றியம். அங்கு விவசாயம் மட்டும் தான் இருக்கிறது. வேறு எந்தத் தொழிலுமே கிடையாது. விவசாயம் செய்வதற்குக்கூட தற்போது அங்கே கிணற்றுப் பாசனம்தான் இருக்கின்றது. கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்கின்ற நிலையில், இப்போது மின் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் அங்கே இருக்கிற, ஏறத்தாழ 3,000 கிராமங்களைச் சார்ந்திருக்கிற அந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பிழைப்பு நடத்துவதற்காக, கட்டுமானப் பணிகளிலே ஈடுபடுவதற்காக 60, 65 கிலோ மீட்டர்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 பிப்ரவரி 24]

தூரம் இருக்கிற திருச்சிக்கு வருகிறார்கள். எனவே, அவர்களின் நலன் கருதி விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கிற அந்தப் பகுதியில் விவசாயமும் தற்போது பாதிக்கப்படுகிற சூழல் இருக்கிற இந்த வேளையிலே அரசு முன்னுரிமை கொடுத்து, மருங்காபுரி ஒன்றியத்திலே ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசும் அமைச்சர் அவர்களும் முன் வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே ஏற்கெனவே அரியமங்கலம், திருவெறும்பூர், வாழவந்தான்கோட்டை, துவாக்குடி ஆகிய பகுதிகளில் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மேலும், தொழில் வணிகத் துறையின் மூலம் துவாக்குடி பகுதியிலே மின்னணுத் தொழிற்பேட்டையும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் திருச்சி மாவட்டத்தில் புதிதாக கும்பக்குடியிலும், வாழவந்தான்கோட்டை பகுதி மூன்றிலுமாக இரண்டு தொழிற்பேட்டைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த புதிய தொழில் கொள்கையின்படி மருங்காபுரி ஒன்றியம் தொழிலிலே பிற்படுத்தப்பட்ட ஒன்றியமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த தொழிற்பேட்டையிலே தொழில் ஆரம்பிக்கின்ற அத்துணை தொழில்களுக்கும் இந்த அரசின்மூலம் சலுகைகள் வழங்கப்படும். ஆகவே, தனியார்கள் முன்வந்தால் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு இந்த அரசு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கிறது. தனியார்கள் *50* ஏக்கருக்கு மேல் தொழிற்பேட்டை அமைக்க முன்வந்தால் ரூ.*1* கோடி அளவிற்கான மானியங்கள் தரவும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது, ஏறத்தாழ

மருங்காபுரி ஒன்றியத்திற்கும், அந்தப் பகுதிகளுக்கும் 80, 90 கி.மீ. தொலைவிலே இருக்கிறது. திருச்சி மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும்தான் இருக்கிறது. எங்களுடைய மருங்காபுரி தொகுதி, திருச்சி மாவட்டத்தின் தென் கோடி பகுதியாக இருக்கிறது. ஆக, தென்கோடி பகுதியிலே இருக்கின்ற அந்த மக்கள் இங்கே செல்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால், அந்த விவசாயிகள் தொழில் இல்லாமல் வயிற்றுப் பிழைப்பு நடத்துவதற்காக தினந்தோறும் திருச்சிக்கு வருவதற்கு ஏறத்தாழ 60, 65 கி.மீ. தூரம் போக்கு லாரியிலே ஏறி ஆண்களும் பெண்களும், இன்னும் சொல்லப்போனால் கைக் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வந்து கட்டுமானத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட துர்பாக்கியமான சூழ்நிலை என்னுடைய தொகுதியிலே நிலவிக்கொண்டிருக்கின்றது. எனவே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லாமல் அந்த ஏழை மக்களுடைய நலன் கருதி என்னுடைய மருங்காபுரி ஒன்றியத்திற்கு அரசின் சார்பிலே ஒரு தொழிற்பேட்டை அமைத்துத்தர வேண்டும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். தொழில் தொடங்க ஆர்வம் உள்ள 20 தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டங்கள் மற்றும் போதுமான நிதியாதாரங்கள் ஆகியவற்றுடன் 20 நபர்கள் தலா திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையான ரூ.10,000 கட்ட முன்வந்தால், புதிதாக தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றை கணக்கில் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிட்கோ கிளை மேலாளர் ஆகியோருடன் கலந்து கருத்தாய்வு செய்து, தொழிற்பேட்டை அமைப்பதற்கான மேல் நடவடிக்கைகள் எதிர்காலத்திலே எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி.

2009 பிப்ரவரி 24]

திருமதி பெ. பிரபாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக துவங்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்டத்தில் இடம்பெற்ற தொழில் வளம் இல்லாத தாராபுரம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் முன்பு தெரிவித்தபடி தொழில் துவங்க ஆர்வம் உள்ள 20 நபர்கள் முன்வந்தால், எதிர்காலத்திலே தாராபுரம் பகுதியிலே தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, தொழிற்பேட்டைகளை துவங்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

56—

கட்டடம்

***56334—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை நகரம், வைகநல்லூர் வடக்கு கிராமத்திலுள்ள வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு அலுவலகத்தைப் புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 1,120 வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 1,084 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் உள்ளன.